(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO. 262/2022 அ.சா.13**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சிவா |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 18.08.2025.

( 5ம் எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். மற்ற எதிரிகள் ஆஜர்.)

முதல் விசாரணை:-

நான் பணையூரில் குடியிருந்து வருகிறேன். வெல்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அரசு தரப்பில் கோரிக்கை விடப்பட்டு, ஏற்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் அனைவரும் எனக்கு பரிட்சயம் என்றும், 03.05.2019-ம் தேதி மதியம் 1.30 மணியளவில் கீரைத்துறை ரயில்வே கேட் தாண்டி பாம்பன் ரோடு பகுதியில் டவுன்க்கு நான் சென்றுகொண்டிருந்ததாகவும், அப்போது மேற்படி எதிரிகள் அனைவரும் கூடி நின்று இன்னைக்கு தப்பவிட்டால் நமக்கு வாய்ப்பு கிடைக்காது. அதனால் பால்பாண்டியை இன்னைக்கே போட்டுவிடவேண்டியது தான் என பேசிக்கொண்டிருந்ததாகவும், அவர்கள் இருந்த சூழ்நிலையை பார்த்து நான் பயந்து வேகமாக சென்றுவிட்டதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. பின்னிட்டு பால்பாண்டியை கொலை செய்த விபரம் தெரியவந்ததாகவும், பயந்துபோய் மேற்படி சங்கதியை நான் யாரிடமும் சொல்லாமல் வெளியூர் சென்று விட்டதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

Sd/- சிவா

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.